**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 113/2020 |
| Name | : Ashok |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**09.01.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது அடிவள்ளியில் வசிக்கிறேன். செங்கல்பட்டில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். 20.05.2020ம் தேதி காலை சுமார் 07.00 மணி அளவில் நான் எனது மாமா வீட்டிற்கு வந்திருந்த போது எனது மாமா பாலகிருஷ்ணன், அவரது மகன் கௌதம் ஆகியோர் ஒரு வண்டியில் TVS STAR CITY பெருமாள் புதூர் சென்று கொண்டிந்தார்கள். அவர்கள் பின்னால் நான் எனது Activa இருசக்கர வாகனத்தில் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தேன் அப்போது சாமாராயப்பட்டி தாண்டி பெருமாள் புதூர் சாலையில் ஒரு வளைவில் எதிரே Splendor plus பைக் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து எனது மாமா சென்ற வண்டியின் மீது மோதியது அதில் எனது மாமாவிற்கு தலை, காது, மூக்கில் காயம் ஏற்பட்டது. கௌதமிற்கும் தலையில் காயம் ஏற்பட்டது. எனது அத்தை மற்றும் பாட்டிக்கு தகவல் சொன்னேன். எதிரே வந்த இருசக்கர வாகனத்தை எதிரி தான் ஓட்டி வந்தார். அவர் பெயர் ஆனந்த் என்று பின்னார் தெரிந்து கொண்டேன். தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். மருத்துவர் பரிசோதித்து எனது மாமா இறந்துவிட்டதாக சொன்னார். கௌதம்

உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார். மருத்துவமனையில் வைத்து பிரேத விசாரணை செய்த போது நான் உடனிருந்தேன். பிரேத பிரசோதனைக்கு உடலை ஒப்படைத்தார்கள். சம்பவம் சம்மந்தமாக அன்றைய தினம் நான் கொமரலிங்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் MBA படித்துள்ளேன். நான் Cholan Paper and boards private limited என்ற தனியார் நிறுவனத்தில் செங்கல்பட்டில் கடந்த 13 வருடங்களாக வேலை செய்கிறேன். நான் வேலை செய்யும் நிறுவனம் செங்கல்பட்டு கூட்டு ரோடு, முக்குத்துறை, திருச்சி பைபாஸில் உள்ளது. நிறுவனத்தில் தினசரி வருகைப் பதிவேடு பராமரிக்கப்படுகிறது. இறந்து போனவர் எனக்கு தாய் மாமா. அவர் டாக்ஸி வைத்து ஓட்டி வந்தார். நான் 30 வருடங்களுக்கு மேலாக அடிவள்ளியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் நிறுவனத்தில் வேலை செய்து வந்தேன் என்றும், விபத்து பற்றி கேள்விப்பட்டு ஊருக்கு வந்து அது சம்மந்தமாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. கொரோனா ஊரடங்கு காலம் என்பதால் நான் சம்பவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்து ஊரில் தான் இருந்தேன். கொரோனா ஊரடங்கு காலத்தில் வெளியே செல்ல கட்டுப்பாடுகள் இருந்தது என்றால் சரிதான்.

(2) எனது தாய் மாமன் வீட்டிற்கு அடிக்கடி செல்வது வழக்கம். அவருக்கு இரண்டு மகன்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் பெருமாள் புதூருக்கு எதற்காக சென்றார் என்றால் அவருக்கு தனிப்பட்ட வேலை (personal work) சம்மந்தமாக சென்றார். அவருடைய தனிப்பட்ட வேலைக்கு நான் எதற்காக அவருடன் சென்றேன் என்றால் எனக்கு வீட்டில் இருந்து போர் அடித்ததால் அவருடன் சென்றேன். நான் எனது மாமா உடன் செல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், கொமரலிங்கம் காவல் நிலையத்திற்கும் சுமார் 3 ½ கி.மீ தூரம் இருக்கும். நானும், எனது மாமாவும் ஒன்றாகத்தான் வீட்டிலிருந்து கிளம்பினோம். நாங்கள் வந்த வழியில் காவல் துறை சோதனை எதுவும் இல்லை. சம்பவம்

நடந்ததாக சொல்லும் இடம் பெருமாள் புதூர் நால் ரோடு என்றால் சரியல்ல அந்த இடத்தில் மூன்று ரோடுகள் இருந்தது. அந்த இடத்தில் இருந்து வடக்கு தான் சாமராயப்பட்டி அதை ஒட்டி விநாயகர் கோவில் உள்ளது என்றால் சரிதான். நானும், எனது மாமாவும் சுமார் 50 அடி இடைவெளிக்கு குறைவாக சென்று கொண்டிருந்தோம்.

(3) சம்பவ இடத்தில் எனது மாமா எதுவும் பேசவில்லை காதில், மூக்கில் ரத்தம் வந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் கொமரலிங்கம் அரசு மருத்துவமனை சுமார் 2 கி.மீ துாரத்தில் உள்ளது என்றால் சரிதான். ஆம்புலன்ஸ்க்கு நான் தான் தகவல் கொடுத்தேன். 10 நிமிடத்தில் ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் கொரோனா தொற்று பரவல் நேரம் என்பதால் ஆம்புலன்ஸ் 10 நிமிடத்தில் வர சாத்தியமில்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உடுமலைப்பேட்டையில் இருந்து அடிவள்ளி சுமார் 20 கி.மீ இருக்கும். நாங்கள் வாகனத்தில் வந்த போது உடுமலையில் போலீசார் இருந்தார்கள். அங்கு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள் ஊருக்கு செல்வதாக சொன்னேன். சம்பவம் நடந்த தினத்திற்கு நான்கு நாட்கள் முன்னால் இருந்து நான் எனது மாமா வீட்டில் இருந்தேன். நான் மட்டும் தான் இருந்தேன். எனது குடும்பத்தினர் வரவில்லை. ஆம்புலன்ஸில் நான், எனது பாட்டி, எனது அத்தை ஆகியோர் சென்றோம். எனது மாமா மகன் இருசக்கர வாகனத்தில் முன்னால் உட்கார்ந்திருந்தார். உண்மையிலேயே நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் அருகில் இருந்த கொமரலிங்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருப்பேன் என்றும் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல எனது மாமாவிற்கு அடி பலமாக இருந்தது அதனால் உடுமலை அழைத்துச் சென்றேன். கொரோனா காலகட்டம் என்பதால் நான் எனது மாமா வீட்டிற்கு வரவில்லை என்றும் இறந்து போன நபர் எனது மாமா என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கொமரலிங்கத்தில் இருந்து உடுமலைப்பேட்டை மெயின் ரோட்டின் வழியாக வந்து பெருமாள் புதுாருக்கு செல்வதற்காக வந்தோம்.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.09 17:01:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 113/2020 |
| Name | : Sujatha |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**09.01.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கொமரலிங்கத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது நங்கையார் மகன். விபத்தில் இறந்து போன பாலகிருஷ்ணன் எனது கணவர். 20.05.2020ம் தேதி காலை 06.30 மணிக்கு எனது கணவர் தனது இருசக்கர வாகனத்தில் எங்களது இரண்டாவது மகனும், எனது நங்கையா மகன் அசோக் உடன் கிளம்பிச் சென்றார். கிளம்பிச் சென்ற சிறிது நேரத்தில் எனது கணவருக்கு அடிப்பட்டதாக அசோக் போன் செய்தார். நான் சென்று பார்த்த போது சாமராயப்பட்டி பெருமாள் புதூர் சாலையில் எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டு தலையில் காயம் ஏற்பட்டு மூக்கு மற்றும் காதில் ரத்தம் வடிந்தது. எனது இரண்டாவது மகனுக்கும் காயம் ஏற்பட்டிருந்து. எதிரே வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். ஆம்புலன்ஸ் மூலமாக உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு எனது கணவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனது இரண்டாவது மகன் கௌதம் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சுமார் 3 நாட்கள் சிகிச்சை பெற்றார். போலீசார் மருத்துவமனைக்கு வந்து பிரேத விசாரணை செய்த போது நான் உடன் இருந்தேன். இது

சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) எதிரே வந்ததாக சொல்லும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை நான் பார்க்கவில்லை.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.09 17:01:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 113/2020 |
| Name | : Senthilkumar |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.01.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொமரலிங்கத்தில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். 22.05.2020ம் தேதி காலை 10.15 மணிக்கு நான் சாமராயப்பட்டி – பெருமாள் புதூர் செல்லும் சாலையில் நான் சென்று கொண்டிருந்த போது சம்பவ இடத்தில் விபத்து சம்மந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் பாலமுருகன் என்பவரும் கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இறந்து போன பாலகிருஷ்ணன் எனக்கு தெரிந்த நபர். ஒரே ஊரைச் சேர்ந்தவர். நான் கையெழுத்து போட்டதாக இடத்தில் இருந்து எனது தோட்டம் சுமார் ½ கி.மீ தூரம்

இருக்கும். நான் சென்ற போது ஏற்கனவே கூட்டமாக இருந்ததா என்றால் ஆமாம். இறந்து போன பாலகிருஷ்ணன் எனக்கு தெரிந்த நபர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.09 17:01:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்